सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

**தொழிலாளர் துறை**

# புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்



# குடிமக்கள் சாசனம்

# குடிமக்கள் சாசனம்

நலவாரிய முகவரி

**புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான**

**தொழிலாளர்கள் நல வாரியம்**

டி 1, தொழிற்பேட்டை, 4-வது குறுக்குத்தெரு,

தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605 009

**நலவாரிய தொலைபேசி எண் :**

0413 - 2241562

**நலவாரிய வலைதள முகவரி :**

(http://labour.pondicherry.gov.in)

# புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்

## குடிமக்கள் சாசனம்

**முன்னுரை:-**

நாட்டின் முன்னேற்றத்திற்கு சீரிய பணியாற்றும் கட்டட மற்றும் இதர கட்டுமான பணியாளர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் பணி செய்ய உகந்த சூழ்நிலை, பாதுகாப்பு மற்றும் நல உதவிகள் முறையாக கிடைப்பதில்லை. கட்டட தொழிலாளர்களின் சம்பளம், பணி நிலமை, சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றை ஒழுங்குமுறைபடுத்துவதற்காக நடுவண் அரசால் கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் ( வேலை மற்றும் பணி முறைகள் ஒழுங்கு படுத்தல்) சட்டம் 1996-ல் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட கட்டட பணியாளர்களை பணியில் அமர்த்தும் மற்றும் கடந்த 12 மாதங்களில் ஏதேனும் ஒரு நாளில் மேற்கூறிய எண்ணிக்கையில் தொழிலாளர்களை பணியமற்தியுள்ள கட்டட மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு பொருந்தும்.

கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் நல வாரிய நிதி ஆதாரத்தை அதிகரிப்பதற்காக மேல் வரி ஒன்றை விதிப்பதற்கும் மற்றும் அதனை வசூல் செய்வதற்கும் வழி செய்ய ஏதுவாக கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல மேல் வரிச்சட்டம் 1996-ல் உருவாக்கப்பட்டது.

**அதிகார ஒப்படைப்பு :-**

மேற்கூறிய இரண்டு சட்டங்களையும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் நடைமுறை படுத்தவும, மற்றும் அதுசார்ந்த கடமைகளை நிறைவேற்றுதற்குறிய அதிகாரத்தை நடுவண் அரசு தனது ஆணை எண். **M.** 20011/1/ 2000-**RW,Dt.01.09.2001** மூலம் வழங்கியுள்ளது.

**விதிமுறைகள் உறுவாக்கம் :-**

புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் ( வேலை மற்றும் பணி முறைகள ஒழுங்கு படுத்தல்) விதிகள் 2001-ல் உறுவாக்கப்பட்டு புதுச்சேரி அரசிதழில்

29.08.2001-ல் அறிவிக்கை செய்யப்பட்டது. இவ்விதிமுறைகளின்படி பல்வேறு நல உதவிகளை கட்டட தொழிலாளர்களுக்கு செய்ய வழி இருப்பினும் தற்பொழுது நலவாரியத்தின் நிதி நிலைமைக்கு ஏற்ப கீழ்கண்ட நல உதவிகள் மட்டும் வழங்கப்படுகின்றன.

1. திருமண உதவி

2. மருத்துவ உதவி

3. மகப்பேறு உதவி

4. கல்வி உதவித்தொகை

5. ஈமச்சடங்கு உதவி - விதிகளில் கூறப்பட்டுள்ள மற்றைய நல உதவிகள் வருங்காலத்தில் நல வாரிய நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக வழங்கப்படும்.

**நலவாரியம் உறுவாக்கம் :-**

கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் 1996 பிரிவு 18-ன் கீழ் புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

**நல வாரிய அமைப்பு மற்றும் வாரிய உறுப்பினர்கள் :-**

நலவாரியம் கீழ்கண்டோரை தலைவராகவும் / உறுப்பினராகவும் கொண்டு செயல்படும்.

1. மாண்புமிகு. தொழிலாளர் துறை அமைச்சர் தலைவர்.

2. நடுவண் அரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்.

3. அரசால் நியமிக்கப்படும் 5 நபர்களுக்கு மிகாத கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள்.

4. அரசால் நியமிக்கப்படும் 5 நபர்களுக்கு மிகாத கட்டட மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களின் உரிமையாளர்கள்.

(அ). 5 நபர்களுக்கு மிகாத அரசு பிரதிநிதிகள் மற்றும் அவர்களில் ஒருவர் கட்டட மற்றும் இதர கட்டுமான பணிகளின் தலைமை ஆய்வாளராக இருத்தல் வேண்டும். மற்றும் சட்டத்துறை பிரதிநிதி ஒருவரும், தொழிலாளர் துறை பிரதிநிதி ஒருவரையும் கொண்டதாக இருக்க வேண்டும்,

(ஆ) இவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர்களில் ஒருவர் பெண் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(இ) நல வாரியம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும். அரசு அலுவலர் பிரதிநிதிகள் அல்லாத நலவாரிய தலைவர், மற்றைய உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுவர்.

**நலவாரியத்தின் செயல்பாட்டு கடமைகள் :-**

1. நிதி நிர்வாகம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.
2. நிதியில் உள்ள தொகையை முதலீடு செய்வது சம்பந்தமான கொள்கைகளை உருவாக்குதல்.
3. ஆண்டு வரவு - செலவு திட்டங்களை அரசின் ஒப்புதலுக்கு சமர்பித்தல்.
4. நல வாரியத்தின் செயல்பாடுகள் பற்றிய ஆண்டு அறிக்கையை அரசுக்கு சமர்பித்தல்.
5. நல வாரியத்தின் வரவு - செலவு கணக்குகளை சரியான முறையில் பராமறித்தல்.
6. சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப நல வாரிய கணக்குகளை ஆண்டு தணிக்கை செய்தல்.
7. நலவாரிய நிதிக்கும் மற்றும் வாரியத்திற்கு உரிய கட்டண தொகையை வசூலித்தல்.
8. நல வாரியத்திற்காகவும், நல வாரிய சார்பாகவும் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்தல்.
9. நல வாரிய உதவிகளையும் கேட்பு மனுக்களையும் விரைவாக தீர்வு செய்தல்.
10. நல வாரியத்திற்கு சேரவேண்டிய தொகை ஏதேனும் இருந்தால் அவற்றினை உரிய காலத்தில் திரும்ப வசூல் செய்தல்.
11. அரசால் அவ்வப்போது கேட்கப்படும் பல்வேறு தகவல்களை நலவாரியம் கொடுத்தல் வேண்டும்.

**நல வாரிய தலைவர் :-**

மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் நல வாரிய தலைவராக இருப்பார்.

**நல வாரிய செயலர் :-**

தொழிலாளர் துறை ஆணையர் நல வாரிய செயலராக செயல்படுவார்.

**நல வாரிய நிதி:-**

நல வாரியம், அரசிடம் இருந்து எவ்விதமான நிதி உதவியும் பெறவில்லை. இருப்பினும், கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல மேல் வரிச் சட்டம் 1996-ன் கீழ் வசூலிக்கப்படும் கட்டுமான மொத்த மதிப்பீட்டில் வசூலிக்கப்படும் ஒரு சதவீத மேல் வரி நிதியினைக் கொண்டு நல வாரிய நிர்வாகம் முழுவதும் நடத்தப்படுகின்றது.

**பட்டியலிடப்பட்டுள்ள தொழிலாளர் நல வாரிய வகையினர் :-**

நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துகொள்ள ஏதுவாக கீழ்கண்ட 37 வகையான தொழிலாளர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர். அவை பின்வருமாறு,

1. மேஸ்திரி
2. கொத்தனார் மற்றும் கல் அடுக்குபவர்.
3. தச்சுத்தொழில் செய்பவர்.
4. வர்ணம் மற்றும் வார்னிஷ் பூசுபவர்.
5. பொறுத்துபவர் **(Fitter)** மற்றும் கம்பி வளைப்பவர்.
6. சம்மட்டி அடிப்பவர்.
7. குடி நீர் குழாய் அமைப்பவர்கள் அல்லது செப்பனிடுபவர்கள்.
8. கலவை போடுபவர் மற்றும் கலவை இயந்திரத்தை இயக்குபவர்.
9. கலவை இயந்திரம் ஓட்டுனர்.
10. மின்சார பணியாள்.
11. கம்மியர் **(Mechanic)**
12. பற்ற வைப்பவர் **(Welder)**
13. மொசைக் மெருகு ஏற்றுபவர்.
14. மார்பிள் / கடப்பா கல் தொழிலாளர்.
15. பந்தல் மற்றும் கூரை வேய்பவர்.
16. கட்டுமான வேலை தொடர்புடைய மண் வேலை செய்யும் தொழிலாளி.
17. மரம் அல்லது கல் பேக்கர்.
18. கருமர்.
19. மரம் அறுப்பவர்.
20. கிணறு தோண்டுபவர்.
21. கிணற்றில் முழ்கி தூர் எடுப்பவர்.
22. கல் வெட்டுபவர் / கல் உடைப்பவர்.
23. சாலை மேற்பரப்பு கலவை போடுபவர் மற்றும் ஜல்லி தெளிப்பவர்.
24. தலைமை மஸ்தூர்.
25. மஸ்தூர்
26. பம்பு இயக்குபவர்.
27. சாலை உருளை ஓட்டுனர்.
28. கட்டுமான பணி மேற்பார்வையாளர்.

29. சாலை வேலையாள்.
30. பாலம் மற்றும் பொறியியல் கட்டுமான பணிகளில் பணிபுரியும் கலாசிஸ் அல்லது சாரங்.
31. சுரங்க (சுரங்க வழி) தொழிலாளர்கள்.
32. பாறை உடைப்பவர் மற்றும் கற்குடைவுகளில் வேலை செய்பவர.
33. கடல் அரிப்பு தடுப்பு மற்றும் துறைமுக கட்டுமான பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள்.
34. சுண்ணாம்பு பதனிடும் தொழிலாளர்.
35. கட்டட தகர்ப்பு தொழிலாளர்கள்.
36. காவலாளி.
37. அணைகள். பாலங்கள். சாலைகள் ஆகியவற்றின் கட்டுமான பணி மற்றும் பராமறித்தல் ஆகியவற்றில் பணிபுரியும் மற்ற ஏனைய வகை தொழிலாளர்கள் அல்லது அதன்படி கடடுமான பணியில் உள்ளவர்கள்.

## நல வாரியத்தில் தொழிலாளர்களை பதிவு செய்தல் :-

சட்ட விதிகளுக்கு உட்பட்டு கட்டட தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து நல உதவி பெறுவதற்கு ஏற்ப கட்டட இதர கட்டுமான தொழிலாளர்கள் பயனாளிகளாக பதிவு செய்யப்படுகின்றனர்.

### அ). அடிப்படை தகுதிகள் :-

1. பதிவு செய்யும் நாளன்று ஓர் தொழிலாளி 18 வயது நிரம்பியவராகவும் 60 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. பதிவு செய்யும் நாளன்று, அவர் கடந்த 12 மாதங்களில் குறைந்த பட்சம் 90 நாட்கள் கட்டட மற்றும் இதர கட்டுமான பணிகளை செய்திருத்தல் வேண்டும்.
3. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொடர்ந்து வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

### ஆ). கட்டண விவரம் :-

நல வாரியத்தில் உறுப்பினாராக சேர விரும்பும் கட்டட தொழிலாளர் பதிவு செய்யும் பொழுது பதிவு கட்டணமாக ரூ.25-ம் மற்றும் ஆண்டு சந்தா கட்டணமாக ரூ.100-ம் செலுத்த வேண்டும். உறுப்பினர்கள் தங்களது ஆண்டு சந்தாவை அவரவர்களுக்கு உரிய தேதியில் தவறாமல் ஒவ்வொரு ஆண்டும் நலவாரியத்தில் செலுத்த வேண்டும்.

**இ). உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பம் :-**

ஓர் கட்டட தொழிலாளி நலவாரியத்தில் உறுப்பினராவதற்கு அதற்குறிய விண்ணப்ப படிவத்தை நலவாரிய அலுவலகத்திலிருந்து இலவசமாக பெற்று, பூர்த்தி செய்து அத்துடன் கீழ்கண்ட ஆவணங்களையும் அவசியம் இணைத்து சமர்பித்தல் வேண்டும்.

1. பிறப்பு சான்றிதழ் / பள்ளி மாற்றுசாண்றிதழ் / அரசு மருத்துவரால் வழங்கப்பட்ட வயதை குறிக்கும் ஆதார சான்றிதழ்.
2. கட்டட தொழிலாளி என்பதற்கான சான்றிதழ், அரசு பதிவு பெற்ற பொறியாளர் / ஒப்பந்ததாரர் / தொழிற்சங்கங்கள் / நல சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட அனுபவ சான்றிதழ்.
3. இரண்டு மார்பு அளவு புகைப்படம்.
4. விண்ணப்பதாரரின் இரத்த வகை குறித்த சான்றிதழ்.
5. புதுச்சேரி அரசால் வழங்கப்பட்ட உணவு பங்கீட்டு அட்டையின் நகல்.

**அடையாள அட்டை:-**

நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் பதிவு செய்த நாளில் இருந்து இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படும். மேற்படி அடையாள அட்டையை உறுப்பினர்கள் தொலைத்துவிட்டால் அவர்கள் நல வாரியத்தை அனுகி மனு செய்து அதற்குறிய கட்டணமாக ரூ.50-ஐ செலுத்தி அடையாள அட்டையின் நகலை பெற்றுக்கொள்ளலாம்.

**வாரிசுதாரர் நியமணம் :-**

ஒவ்வொரு தொழிலாளியும் நல வாரியத்தில் உறுப்பினராக விண்ணப்பம் செய்யும் பொழுது தனது வாரிசுதாரின் பெயர், வயது, முகவரி ஆகியவற்றை தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

**நல உதவிகள் :-**

பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களும், வாரியத்தால் வழங்கப்படும் கீழ்கண்ட நல உதவிகளை பெற தகுதியுடையவர்கள். நல உதவிகளின் விவரங்களும், அதனை பெறும் வழிமுறைகளும் பின்வருமாறு :-

1. **திருமண உதவித் தொகை ரூ.5000/-** நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் உறுப்பினராக இருக்கும் ஓர் தொழிலாளி தனது இரண்டு பிள்ளைகளுக்கு மட்டும் இச்சலுகையை பெறலாம். பெண் உறுப்பினகள் தங்களது திருமணத்திற்காகவும் இந்த உதவியை பெறலாம். அதற்கான விண்ணப்ப படிவ எண் XLIII உடன் கீழ்கண்ட ஆவணங்களையும் இணைத்து நலவாரியத்தில் கொடுத்தல் வேண்டும்.

அ). நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் நகல்.

ஆ). ஆண்டு சந்தா செலுத்திய இரசீதின் நகல்.

இ). அரசு பதிவாளரால் வழங்கப்பட்ட திருமண சான்றிதழ்.

ஈ). மணமகன் / மணமகள் இவர்களின் பிறப்புச் சான்றிதழ்.

2. **மகப்பேறு உதவித்தொகை. ரூ.1500/-** நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து ஆண்டு சந்தா செலுத்தி வரும் பெண் தொழிலாளர்கள் முதல் மற்றும் இரண்டாவது குழந்தைகளின் பேறுகாலத்திற்கு இச்சலுகையை பெற தகுதி உடையவர்கள். அதற்கான விண்ணப்ப எண். XXXIII உடன் கீழ்கண்ட ஆவணங்களையும் இணைத்து நலவாரிய அலுவலகத்தில் கொடுத்தல் வேண்டும்.

1. நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் நகல்.
2. ஆண்டு சந்தா செலுத்திய இரசீதின் நகல்.
3. பிறந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழ்.
4. மருத்துவரின் மருந்து பறிந்துரை சீட்டு மற்றும் சிகிச்சை மேற்கொண்டதற்கான அட்டை.
5. மருத்துவமனையில் இருந்து விடுவிக்க பட்டதற்கான சான்றிதழ்.

**மருத்துவ உதவித்தொகை:-**

மருத்துவமனைகளில் உள்ளிருப்பு நோயாளியாக சிகிச்சை பெரும் தொழிலாளி முதல் 5 நாட்களுக்கு ரூ.200/-ம் மேற்கொண்ட மற்றைய நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/-வீதம் அதிகபட்சமாக ரூ.720/-ம் பெற தகுதியுடைவர்கள். படிவம் எண் XLIII மருத்துவ உதவிக்கு விண்ணபிக்கும் பொழுது அதனுடன் இணைக்கபட வேண்டிய சான்றிதழ்கள் பின்வருமாறு:-

1. நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் நகல்.
2. ஆண்டு சந்தா செலுத்திய இரசீதின் நகல்.
3. மருத்துவரின் மருந்து பறிந்துரை சீட்டு மற்றும் சிகிச்சை மேற்கொண்டதற்கான அட்டை.
4. மருத்துவமனையில் இருந்து விடுவிக்க பட்டதற்கான சான்றிதழ்.

**ஈமச்சடங்கு உதவி:-**

நல வாரிய உறுப்பினர்கள். உறுப்பினராக இருக்கும் பொழுது மரணம் அடைந்தால் அவர்களது வாரிசு தாரர்களுக்கு ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.2000/-ம் வழங்கப்படுகிறது. அவ்வுதவியை பெற விண்ணப்ப எண் XXXIX-ஐ பூர்த்தி செய்து உறுப்பினரின் அடக்க உத்தரவு மற்றும் அத்துடன் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை சேர்த்து நல வாரியத்தில் கொடுத்து உடனடியாக ஈமச்சடங்கு உதவித்தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

நல வாரியத்தில் பயனாளியாக பதிவு செய்துள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பை நீட்டிக்கும் வகையில் அனைவரும் ஆயுள் காப்பீட்டு கழகத்தின் **"ஜனஸ்ரீ பீம யோஜனா"** திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றனர். அதன் பயனாக தொழிலாளர்கள் அடையும் நன்மைகள் பின்வருமாறு:-

1. இயற்கை மரணம் அடைந்த தொழிலாளியின் வாரிசுக்கு ரூ. 30,000/-மும்.
2. விபத்தினால் மரணம் அடைந்த தொழிலாளியின் வாரிசுக்கு ரூ. 75,000/-மும்.
3. விபத்தினால் முழு ஊனம் அடைந்த தொழிலாளிக்கு ரூ. 75,000/-மும்.
4. விபத்தினால் உடல் உறுப்புகளை இழந்து ஊனம் அடைந்த தொழிலாளிக்கு ரூ. 37,500/-ம் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு ITI மற்றும் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆயுள் காப்பீட்டு கழகத்தின் நிதி நிலைகளுக்கேற்ப ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,200/- கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இச்சலுகை பயனாளியின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும்.

## "ராஷ்ட்ரீய சுவஸ்திய பீம யோஜனா" திட்டம்:-
## (தேசிய மருத்துவ காப்பீட்டு திட்டம்)

கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் நலனுக்காக, தொழிலாளர்கள் உள்ளிருப்பு நோயாளியாகவோ அல்லது அறுவை சிகிச்சை பெறவோ நடுவண் அரசால் கொண்டுவரப்பட்ட ஓர் அறிய திட்டம் தான் இந்த **"ராஷ்ட்ரீய சுவஸ்திய பீம யோஜனா திட்டம்"** (தேசிய மருத்துவ காப்பீட்டு திட்டம்). இத்திட்டத்தை முதன் முதலாக புதுச்சேரி பகுதியில் வசிக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பயனாளிகள் மட்டும் பயனடையும் வகையில் செயல்படுத்த புதுச்சேரி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொழிலாளிகளை அடையாளம் காணும் வகையில் ஒவ்வொறு தொழிலாளியும் மற்றும் அவர் குடும்பத்தினரும் பயன்பெற ஏதுவாக ஸ்மார்ட் கார்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் படி ஒரு குடும்பம் என்பது குடும்பத்தலைவர், மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தைச் சார்ந்திருக்கும் 5 நபர்களை கொண்டது.

### இத்திட்டதை பற்றிய விவரங்கள் :-

1. இத்திட்டத்தின் கீழ் பயனடைய புதுச்சேரியில் வசிக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பயனாளிகள் ரூ. 30/-ஐ பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ் ஓர் பயனாளியும் அவரது குடும்பத்தினரும் மருத்துவமனையில் உள்ளிருப்பு நோயாளியாக சிகிச்சை பெறுவதற்கு முன்பும், பின்பும் மற்றும் அறுவை சிகிச்சைக்கு உரிய செலவினமாக ஆண்டுக்கு ரூ.30,000/- வரை மருத்துவ உதவி பெறலாம். மேலும், போக்குவரத்து செலவுக்காக ஒரு முறை மேற்கொள்ளும் பயணத்திற்கு ரூ.100/- வீதம் ஆண்டுக்கு ரூ.1000/-க்கு மிகாமல் பெறலாம்.
3. இக்காப்பீட்டு திட்டப்படி பணம் செலுத்தாமல் மருத்துவ உதவி பெறலாம்.
4. இத்திட்டம், உள்ளிருப்பு நோயளியாக சேர்வதற்கு முன்பும், உள்ளிருப்பு நோயளியாக சேர்ந்த பின்பும் ஆகும் செலவினத்தில் மருத்துவமனையில்

சேர்வதற்கு ஒரு நாள் முன்பும் மருத்துவமனையில் சேர்ந்த 5 நாட்களுக்கு பிறகு ஆகும் செலவினங்களை பெற வழி உண்டு. இக்காப்பீட்டு திட்டத்தின் ஆண்டு சந்தாவில் 75% நடுவண் அரசினாலும், 25% புதுச்சேரி யூனியன் பிரதேச அரசினாலும் செலுத்தப்படும்.

**இத்திட்டம் பற்றி மேற்கொண்டு தகவல் பெற தொடர்பு கொள்ளவேண்டிய அதிகாரி:-**

இக்காப்பீட்டு திட்டத்தினை பற்றி விரிவான தகவல் வேண்டுவோரும் மற்றும் விண்ணப்ப படிவம் வேண்டுவோரும் கீழ்கண்ட அரசு அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

1. **செயலர்.**

   புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்.
   டீ1,தொழிற்பேட்டை, 4-வது குறுக்குத்தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 605 009

   **தொலைபேசி எண்:-**

   **0413 - 2241562**

2. **தொழிலாளர் அலுவலர்.**

   புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்.
   டீ1,தொழிற்பேட்டை, 4-வது குறுக்குத்தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி – 605 009

   **தொலைபேசி எண்:-**

   **0413 – 2241562**

3. **தொழிலாளர் அலுவலர் அலுவலகம்,**

   பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகம்,

   மதகடி, காரைக்கால்.

   **தொலைபேசி எண்:-**

4. **உதவி தொழிலாளர் ஆய்வாலர் அலுவலகம்,**

   துணை நிர்வாக வளாகம், மாஹே.

   **தொலைபேசி எண்:-**

5. **உதவி தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம்,**

எரகொண்டா வீதி, ஏனாம்.

**தொலைபேசி எண்:-**

## குறைபாடுகள் நிவர்த்தி செய்தல் :-

தொழிலாளர்களுக்கிடையே எழும் மனக்குறைகளுக்கு தீர்வு காணவும், மற்றும் ஏதேனும் புகார் அல்லது ஆலோசனை கூற விரும்பினால் பொது மக்களும், தொழிலாளர்களும், நல வாரிய தொழிலாளர் அலுவலரை அனைத்து வேலை நாட்களிலும் நேரில் அணுகலாம். அதுபோன்று மற்ற பிராந்தியங்களில் உள்ள தொழிலாளர்கள் அங்குள்ள நலவாரிய பொறுப்பு அலுவலர்களை அணுகலாம்.

படிவம் -54

# திருமண உதவி விண்ணப்பபடிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :

2. முகவரி :

3. பதிவு எண் :

4. வயது மற்றும் பிறந்த தேதி :

5. முதல் சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி :

6. இறுதி சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி

7. உறுப்பினராக இருந்த காலம் :

8. உறுப்பினர் தொடர்ந்து புதுப்பித்துள்ளாரா :
:

9. விண்ணப்பதாரின் மகன் (அ) மகளின் திருமணம் :

(1) இந்த நலவாரியத்தில் உறுப்பினர் கணவரா (அ) மனைவியா

(2) நிதியுதவி இதற்கு முன் பெற்றவரா. :

(3) திருமணத்தின் போது மகன் (அ) மகளின் வயது :

(4) விண்ணப்பதாரரின் மகன் (அ) மகள் திருமணம் செய்துகொள்ளும் இடத்தின் விலாசம் :

(5) திருமணம் நடைக்கும் இடம் மற்றும் தேதி :

(6) திருமணச் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதி மற்றும் எண் : :

திருமணச் சான்றிதழ் வழங்கிய அலுவலரின் பெயர் மற்றும் விலாசம்: :

(7). விண்ணப்பதாரர் தன் மகள் (அ) மகனுக்கு முன் கூட்டியே இதுபோன்ற நிதியுதவி பெற்றிருந்தால் அதைப்பற்றிய விளக்கம் :

10. விண்ணப்பதாரர் தனக்குத்தானே திருமணம் செய்துகொள்வதாக இருந்தால் (பெண்களுக்கு மட்டும்) :

(1) கணவர் (அ) மணமகனின் பெயர் மற்றும் விலாசம் :

(2) திருமணம் நடக்கும் இடம் மற்றும் தேதி :

(3) திருமணச் சான்றிதழ் வழங்கிய தேதி மற்றும் எண் வழங்கியவர் பெயர் மற்றும் விலாசம் :

11. விண்ணப்பதாரர் அரசு மூலமோ (அ) வேறு நிறுவனங்கள் மூலமோ இதுபோன்ற நிதியுதவி பெற்றிருந்தால் அதைப் பற்றிய விவரம். :

மேற்கூறிய அனைத்தும் எனக்கு தெறிந்தவரை உண்மை என்று உறுதியளிக்கிறேன்

இடம்:

தேதி: விண்ணபதாரரின் கையொப்பம்

## படிவம்-33

# மகப்பேறு உதவி விண்ணப்பபடிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :
2. பதிவு எண் :
3. வயது மற்றும் பிறந்த தேதி :
4. கணவரின் பெயர் :
5. கருவுற்ற தேதி
6. இந்த உதவியை இதற்கு முன் விண்ணப்பத்துள்ளிர்களா :
7. அப்படி ஏதாவது பெற்றிருந்தால் அது பற்றிய விபரம் :
8. பதிவு செய்த தேதி :
9. முதல் சந்தா கட்டிய தேதி :
10. இறுதி சந்தா கட்டிய தேதி :
11. வங்கியின் பெயர் மற்றும் இடம் :
12. இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் பட்டியல் :

மேற்கூறிய அனைத்தும் எனக்கு தெறிந்தவரை உண்மை என்று உறுதியளிக்கிறேன்

இடம்:

விண்ணபதாரரின் கையொப்பம்

தேதி:

# படிவம்-53
# மருத்துவ உதவி விண்ணப்படிவம்

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :

2. வயது மற்றும் பிறந்த தேதி :

3. பதிவு எண் :

4. முதல் சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி :

5. இறுதி சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி :

6. கட்டிய மொத்த தொகை :

7. வியாதி மற்றும் அறுவை சிகிச்சை பற்றிய விபரம் :

8. வியாதி மற்றும் அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட ஊனம் :

9. அரசு மருத்துவமனையில் சிகிச்சை செய்துக்கொண்ட காலம் (சேர்ந்த தேதி மற்றும் விடுப்பட்ட தேதி) :

10. இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் பட்டியல் :

11. இதற்கு முன் ஏதாவது இது போன்ற மருத்துவ உதவி பெற்று இறுப்பின் அது பற்றிய விபரம் :

மேற்கூறிய அனைத்தும் எனக்கு தெறிந்தவரை உண்மை என்று உறுதியளிக்கிறேன்

இடம் :

தேதி :

விண்ணபதாரரின் கையொப்பம்

படிவம் -39

# ஈமச்சடங்கு உதவித்தொகை விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :

2. உறுப்பினரின் உறவுமுறை :

3. உறுப்பினரின் பெயர் மற்றும் முகவரி :

4. பதிவு எண் :

5. பதிவு செய்த தேதி :

6. முதல் சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி :

7. இறுதி சந்தா கட்டிய தொகை மற்றும் தேதி :

8. உறுப்பிராக இருந்த காலம் :

9. உறுப்பினர் தொடர்ந்து புதுப்பித்துள்ளாரா :

10. உறுப்பினர் இறந்த தேதி :

11. இறப்பிற்கான காரணம் :

12. விண்ணபதாரர், உறுப்பினரின் வாரிசுதாரரா :

13. அப்படி இல்லையாயின் விண்ணபதாரர் சார்புச்சான்றிதழ் வழங்கவும் :

14. வாரிசுதாரரின் வயது மற்றும் பிறந்த தேதி :

15. வாரிசுதாரர் மைனராயின் பாதுகாவலரின் பெயர் மற்றும் உறவுமுறை :

16. ஒன்றிக்கு மேற்பட்ட வாரிசுதாரர் இருப்பின் அவர்களிடம் இருந்து ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளதா? :

17. வாரிசுதார்ரின் பாதுகாவளரின் சான்றிதழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதா :

18. விண்ணப்பிக்கப்பட்டுள்ள உதவித்தொகை :

மேற்கூறிய அனைத்தும் எனக்கு தெறிந்தவரை உண்மை எள்று உறுதியளிக்கிறேன்

இடம்:

தேதி: விண்ணபதாரின் கையொப்பம்

படிவம் -50

# இறப்பு உதவித்தொகை விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :

2. உறுப்பினரின் உறவுமுறை :

3. உறுப்பினரின் பெயர் மற்றும் முகவரி :

4. பதிவு எண் :

5. வயது மற்றும் பிறந்த தேதி :

6. உறுப்பினரின் திருமணம் ஆனவரா :

7. இயற்கை மரணமா (விளக்கம் தருக) :

8. இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் பட்டியல் :

9. விண்ணப்பிக்கப்பட்டுள்ள உதவித்தொகை :
:

மேற்கூறிய அனைத்தும் எனக்கு தெறிந்தவரை உண்மை என்று உறுதியளிக்கிறேன்

இடம்:

தேதி: விண்ணபதாரரின் கையொப்பம்

அமைப்பு முறைப்படம்.

## புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்

